# இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின்போது எருசலேம்

*"எல்லாச் சாலைகளும் ரோமாபுரிக்கே செல்லுகின்றன," என்றோ அல்லது இதைப் போன்றோ கூற்று வழங்கப்பட்டது. ரோமாபுரியானது ரோமப் பேரரசின் மையப்பகுதியாக இருந்தது- ஆனால் இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் காலத்தில், யூதர்களின் கவனக்குவிப்பு வேறிடத்தில் இருந்தது. யூதர்கள் ''வானத்தின் கீழிருந்த சகல தேசங்களிலுமிருந்து'' பஸ்காவுக்காக எருசலேமில் கூடியிருந்தனர்: பார்த்தியா, மேதியா, எலாமீத்தா, மெசொப்பொத்தாமியா, யூதேயா, கப்பத்தோக்கியா, பொந்து, ஆசியா, பிரிகியா, பம்பிலியா, எகிப்து, லீபியா (சிரேனே), ரோமாபுரி, கிரேத்தா, அரபு (அப். 2:9-11ஐக் காணவும்). திரளான இந்த எண்ணிக்கையில் இருந்தவர்களில் பலர் "சிலுவையில் அறையும்!" என்று கூக்குரலிட்ட கூட்டத்தில் இருந்தனர்.*

*பஸ்காவுக்கு ஐம்பது நாட்களுக்குப் பின்பு, பெந்தெகொஸ்தே நாளன்று இன்னொரு திரள் கூட்டம் கூடிற்று, இதில் இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின்போது இருந்தவர்கள் பலர் உள்ளடங்கியிருந்தனர். பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும் முதல் சுவிசேஷப் பிரசங்கத்தைப் பிரசங்கித்தபோது, இந்த யூதர்களுக்கு, " ... நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார்" என்று கூறப்பட்டது (அப். 2:36). "இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்தில் குத்தப்பட்டவர்களாகி, ... சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்? என்றார்கள்'' (அப். 2:37). அவர்களுக்கு, ''நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" என்று கூறப்பட்டது (அப். 2:38). அந்தக் கட்டளைகளுக்குச் சுமார் மூவாயிரம்பேர் கீழ்ப்படிந்தனர், சபையானது நிலைநாட்டப்பட்டது.*

*இந்த நாளில், வரலாற்றின் கவனக்குவிப்பிடம் எருசலேமாக இருந்தது. சபை தொடங்குகையில், புதிய கிறிஸ்தவர்களில் பலர் வெளியேறும்படி பலவந்தம் பண்ணப்பட்ட வரையிலும் எருசலேமில் தங்கியிருந்தனர். பிற்பாடு, சிலர் பல்வேறு தேசங்களுக்குத் தங்களுடன் சுவிசேஷத்தை எடுத்துச் சென்றனர்.*




அநேக நாடுகளிலிருந்து யூதர்கள் எருசலேமில் கூடிவந்தனர்